பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID காப்புறுதி பத்திரம்)**

**ஆதன சகல ஆபத்துக்கள் மற்றும் வர்த்தக இடையூறு காப்புறுதி பத்திரம்**

**1. காப்பீட்டு விடயதானம்**

ஆதன சகல ஆபத்துக்கள் மற்றும் வர்த்தக இடையூறு காப்புறுதி பத்திரமானது, பெரிய மற்றும் உயர் பெறுமதி ஆபத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட பூரண காப்புறுதி தீர்வொன்றாகும். அதன் ஆதனங்களின் பௌதீக இழப்பு அல்லது சேதம் மற்றும் வர்த்தக இடையூறின் காரணமான நிதி விளைவுகளில் இருந்தும், வியாபாரத்தை இது பாதுகாக்கின்றது.

பிரிவு A – பொருட் சேதம் – காப்புறுதி செய்யப்பட்ட வியாபார ஆதனங்களின் பௌதீக இழப்பு அல்லது சேதத்துக்கு காப்பீடு வழங்குகும் அதே வேளை, பிரிவு B – வர்த்தக இடையூறு – காப்புறுதி செய்யப்பட்ட பௌதீக இழப்பு அல்லது சேதத்தினால் விளையும் வருமான இழப்பு மற்றும் ஏனைய நிதி விளைவுக்கு காப்பீடு செய்கின்றது.

**2. எதனைக் காப்பீடு செய்கின்றது?**

**பொருட் சேதம்**
கட்டிடங்கள், இயந்திராதிகள், கையிருப்பு மற்றும் உள்ளடக்கங்கள் உட்பட, இக்காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் குறிப்பாக விலக்கப்பட்டுள்ளவை அன்றி, எக்காரணத்தினாலும் ஏற்படும் எதேச்சையான இழப்பு, அழிவு அல்லது சேதத்தில் இருந்தும் பௌதீக ஆதனங்களுக்கு, விரிவான "சகல ஆபத்து" பாதுகாப்பை இப்பகுதி வழங்குகின்றது.

**வர்த்தக இடையூறு**
பொருட் சேதத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள பௌதீக இழப்பு அல்லது சேதத்தினால் உங்கள் வியாபாரத்துக்கு இடையூறு ஏற்பட்டால், அதனால் விளையும் மொத்த இலாப இழப்புக்கு இப்பகுதி காப்பீடு வழங்கும்.

இடையூறை ஆகவும் குறைப்பதற்கும், இயன்றளவு சீக்கிரமாக வழமையான வர்த்தக செயற்பாட்டை மீளெழுப்புவதற்கும் அவசியமாக ஏற்பட்ட மேலதிக செலவினங்களையும் இக்காப்புறுதிப் பத்திரம் காப்பீடு செய்யும்.

**3. காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**

இந்தக் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்படாத சந்தர்ப்பங்களையும் நிகழ்வுகளையும் தீர்மானிக்கும் குறிப்பான ஆதன விடுகைகளையும் மற்றும் ஆபத்து விடுகைகளையும் இது உள்ளடக்கியுள்ளது. பிரயோகமாகத் தக்க விடுகைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பூரணமான விளக்கத்துக்கு, தயவு செய்து முழு காப்புறுதிப் பத்திரத்தையும் உசாவவும்.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

- மொத்த விற்பனையையும் மொத்த இலாபத்தையும் உள்ளடக்கியதாக உங்களது வியாபாரத்தையும் அதன் வளாகத்த்தையும் மற்றும் சம்பந்தப்பட்ட நிதி விபரங்களையும் பற்றிய உண்மையானதும், பூரணமானதுமான தகவல்களை வழங்க வேண்டும்.

- சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட ஆதனத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும், வர்த்தக இடையூறு கோரிக்கைகளுக்காக, இடையூறுகளை ஆகவும் குறைப்பதற்காகவும், விளைவாந்தன்மையான இழப்பை குறைப்பதற்காகவும் சகல நியாயாமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்,

- கோரிக்கையொன்றுக்கு வழிகோளத்தக்க ஏதும் சேதம், இழப்பு அல்லது சந்தர்ப்பங்கள் பற்றி உடனடியாக பயார்பஸ்ட் இன்சூரன்ஸுக்கு அறிவிக்க வேண்டியதுடன், ஆபத்தின் மீது தாக்கம் செலுத்தக் கூடிய ஏதும் குறைபாடு அல்லது இயக்கப்பாட்டு மாற்றங்கள் பற்றியும் அறிவிக்க வேண்டும்.

- ஆதனத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், காப்புறுதி வழங்குனரின் சம்மதம் பெறப்பட்டிருந்தாலன்றி, சேதத்துக்குள்ளான அம்சங்களில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ மேற்கொள்ளப்படாமல், பார்வைக்காக அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

- கோரிக்கை விசாரணையின் போது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டியதுடன், சகல ஆதார சான்றுகளும் ஆவணங்களும் வழங்கப்பட வேண்டும்.

- வர்த்தக செயற்பாட்டின் ஏதும் முடிவுறுத்தல் அல்லது வங்குரோத்து அல்லது உரித்துரிமையில் மாற்றம் பற்றி பயார்பஸ்ட் இன்சூரன்ஸுக்கு அறிவிக்கப்பட

வேண்டியதுடன், காப்புறுதி வழங்குனரின் பார்வைக்காக நியாயமான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

## 6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

+94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

+94 11 2335167 | info@ircsl.gov.lk | www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

+94 11 2505542 / +94 11 2505041 | info@insuranceombudsman.lk |

www.insuranceombudsman.lk

## 7. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

+94 11 2428428 | info@fairfirst.lk | www.fairfirst.lk

## 8. மேலதிக தகவல்கள்

சராசரி பத்தியொன்றை இக்காப்புறுதிப் பத்திரம் உள்ளடக்கியுள்ளது. அதன் அர்த்தமாவது, உண்மையான பெறுமதிக்கும் குறைவாக உங்கள் ஆதனம் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதாயின், கோரிக்கை செலுத்துகையேதும் விகிதாசாரமாக குறைக்கப்படலாம்.

வர்த்தக இடையூறு பகுதியானது, ஆரம்ப பௌதீக சேதம் ஆதன சகல ஆபத்து பகுதியின் கீழ் காப்பீடு செய்யப்படுவதன் பேரில் தங்கியுள்ளது என்பதை கவனிக்கவும். பௌதீக சேதம் காப்பீடு செய்யப்பட்டிருக்கும் நிலையிலேயே, வர்த்தக இடையூறு கோரிக்கையொன்று கருத்தில் கொள்ளப்படும். அத்துடன், கோரிக்கையொன்று அனுமதிக்கப்படுவதும் செலுத்தத் தக்கதும் ஆதன சகல ஆபத்து பகுதியின் கீழாகும்.

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த

நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.